
**ஏப்ரல் – 01**

# TNPSC துளிகள்

- ஆறு ஆண்டு காலத்திற்கு 22,919 கோடி ரூபாய் மதிப்பிலான மின்னணு பாகங்கள் உற்பத்தித் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மத்தியக் கல்வித் துறை அமைச்சகமானது, நாட்டில் உள்ள அனைத்து மொழிகளிலும் ஆங்கில மொழியிலும் மழலையர் பள்ளி பாடல்கள் மற்றும் அதற்கான கவிதைகளின் தொகுப்பைத் தயாரிப்பதற்காக "பால்பன் கி கவிதா" முன்னெடுப்பினைத் தொடங்கி உள்ளது.
- உலக சுகாதார அமைப்பு மற்றும் கொலம்பியா நாட்டின் அரசாங்கத்தினால் நடத்தப் பட்ட இரண்டாவது காற்று மாசுபாடு மற்றும் சுகாதார மாநாடு ஆனது ஸ்பெயின் நாட்டின் கார்டஜெனா எநனுமிடத்தில் நடைபெற்றது.
- குஜராத்தில் உள்ள ஆனந்த் கிராமப்புற மேலாண்மைக் கல்வி நிறுவனத்தில் (IRMA) இந்தியாவின் முதல் தேசியக் கூட்டுறவுப் பல்கலைக்கழகத்தினை உருவாக்கச் செய்வதற்கான 2025 ஆம் ஆண்டு திரிபுவன் சஹ்காரி பல்கலைக்கழக மசோதாவினை மக்களவை நிறைவேற்றியுள்ளது.
- இந்தியாவின் இரட்டையர் பாட்மிண்டன்/பூப்பந்து போட்டி நிபுணரான தெலுங்கானா மாநிலத்தின் B. சுமீத் ரெட்டி தொழில்முறை பாட்மிண்டன் விளையாட்டுகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- INDRA எனப்படும் இந்திய - ரஷ்யா இடையிலான 14வது இருதரப்பு கடற்படைப் பயிற்சி சென்னையில் நடைபெற்று வருகிறது.

# தேசியச் செய்திகள்


## கொதிகலன்கள் மசோதா, 2024




- 2024 ஆம் ஆண்டு கொதிகலன்கள்என்ற மசோதாவினை மக்களவையின் ஒப்புதலுடன் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது 1923 ஆம் ஆண்டு கொதிகலன் சட்டத்தினை ரத்து செய்கிறது.

- இது கொதிகலன்களின் பயன்பாட்டினை மிக நன்கு ஒழுங்குபடுத்துவதற்கும், நீராவி கொதிகலன்கள் வெடிப்பதால் ஏற்படும் ஆபத்திலிருந்து அப்பணியாளர்களின் உயிர் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பிற்கும் வழிவகுக்க முயல்கிறது.
- நாட்டில் கொதிகலன்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டின் போதான பதிவு மற்றும் ஆய்வு ஆகியவற்றில் சீரான தன்மையையும் இந்தச் சட்டம் வழங்குகிறது.
- உயிர் மற்றும் சொத்து இழப்புக்கு வழி வகுக்கும் நான்கு முக்கியமான குற்றங்களுக்கு இதற்கு முந்தைய மசோதாவில் விதிக்கப்பட்டக் குற்றவியல் தண்டனைகளும் இந்தப் புதிய மசோதாவில் தக்க வைக்கப் பட்டுள்ளன.
- பிற குற்றங்களுக்கு, நிதி அபராதம் விதிப்பதற்கான விதிமுறையும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.
- 1923 ஆம் ஆண்டு கொதிகலன் சட்டத்தில், மாநில அரசாங்கத்திற்கான ஒரு வரையறை எதுவும் குறிப்பிடப் படவில்லை ஆனால் தற்போதைய இப்புதிய மசோதாவில், மாநில அரசாங்கத்திற்கான வரையறை சேர்க்கப்பட்டுள்ளது.

## கடல்வழி சரக்குப் போக்குவரத்து தொடர்பான மசோதா, 2024




- 2024 ஆம் ஆண்டு கடல் வழி சரக்குப் போக்குவரத்து மசோதாவானது அவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று மக்களவையில் அறிமுகப் படுத்தப்பட்டது.
- இது 1925 ஆம் ஆண்டு இந்தியப் பொருட்களின் கடல் வழி சரக்குப் போக்குவரத்துச் சட்டத்தினை மாற்றியமைக்க முயல்கிறது.
- இது இந்தியாவில் உள்ள ஒரு துறைமுகத்திலிருந்து வேறு அல்லது உலகின் வேறு எந்த துறைமுகத்திற்கும் கொண்டு செல்லப்படும் பொருட்களின் மீதான பொறுப்புகள், கடமைகள், உரிமைகள் மற்றும் விலக்குகளை நிறுவுகிறது.
- இந்தச் சட்டம் ஆனது 1924 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட கப்பல் சரக்கு ஏற்றுப் பட்டியல் (ஹேக் விதிகள்) தொடர்பான விதிகள் மற்றும் அதன் பின்னர் செய்யப் பட்ட திருத்தங்கள் தொடர்பான சில சட்ட விதிகளை ஒன்றிணைப்பதற்கான சர்வதேச உடன்படிக்கைக்கு இணங்க உள்ளது.

- இந்தப் புதிய மசோதாவானது, பழையச் சட்டத்தின் அனைத்து விதிகளையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

## கோசி மெச்சி உள் மாநில நதிநீர் இணைப்புத் திட்டம்





- பீகாரின் கோசி மெச்சி உள் மாநில நதிநீர் இணைப்புத் திட்டத்திற்குப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (CCEA) ஒப்புதல் அளித்துள்ளது.
- இது பிரதான் மந்திரி கிருஷி சின்சாய் யோஜனா - துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனப் பலன்கள் திட்டத்தின் (PMKSY-AIBP) கீழ் சேர்க்கப்படும்.
- இந்தத் திட்டம் ஆனது பீகாரில் உள்ள மகாநந்தா நதிநீர்ப் படுகைக்கு நீர்ப்பாசனத்தை விரிவுபடுத்துவதற்காக வேண்டி கோசி ஆற்றின் உபரி நீரின் ஒரு பகுதியைத் திருப்பி விடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வேளாண்மையில் நீர் அணுகலை மேம்படுத்துவதற்கும், உறுதியான நீர்ப்பாசனத்தின் கீழ் சாகுபடி செய்யக்கூடியப் பகுதியை விரிவுபடுத்துவதற்காகவும், வேளாண்மையில் நீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காகவும் என 2015-16 ஆம் ஆண்டில் PMKSY திட்டம் தொடங்கப்பட்டது.

## இந்தியாவில் மூன்று மொழிப் பள்ளிகள்

- இந்தியாவின் பெரிய மாநிலங்களில், பள்ளிகளில் மும்மொழிக் கொள்கையினை / மூன்று மொழிகளைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு கடைசி இடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் சுமார் 1905 (3.2%) பள்ளிகள் மட்டுமே இந்த மும்மொழிக் கல்வியினை வழங்குகின்றன.
- 35,092 (59.8%) பள்ளிகள் இரண்டு மொழிகள் அடிப்படையிலான கல்வியையும், 21,725 (37%) பள்ளிகள் ஒரு மொழி அடிப்படையிலான கல்வியையும் வழங்குகின்றன.
- ஒட்டு மொத்தமாக, இந்தியாவில் சுமார் 9,06,225 (61.6%) பள்ளிகள் மூன்று மொழிகள் அடிப்படையிலான கல்வியையும், சுமார் 4,16,601 (28.3%) பள்ளிகள் இரண்டு மொழிகள் அடிப்படையிலான கல்வியையும், சுமார் 1,49,065 (10.1%) பள்ளிகள் ஒரு மொழியை மட்டுமே அடிப்படையிலான கல்வியையும் வழங்குகின்றன.
- உத்தரப் பிரதேசத்தில் மூன்று மொழிகள் அடிப்படையிலான கல்வியையும் வழங்கும் பள்ளிகள் அதிக எண்ணிக்கையில், அதாவது 82.8% (2,11,114) ஆக உள்ளன.
- அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா 68.7% (74,342), இராஜஸ்தான் 65.1% (70,148), மத்தியப் பிரதேசம் 55.4% (68,388), கர்நாடகா 76.4% (57,950) மற்றும் குஜராத் 97.6% (52,357) ஆகியவை

இடம் பெற்றுள்ளன.

- தென் மாநிலங்களில், கேரளாவில் சுமார் 11,367 (71.7%) பள்ளிகள் மூன்று மொழிகள் அடிப்படையிலான கல்வியைக் கற்பிக்கின்றன என்ற ஒரு நிலைமையில் ஆந்திரப் பிரதேசத்தில் 26,696 (43.5%) பள்ளிகளும், தெலுங்கானாவில் 26,828 (62.5%) பள்ளிகளும் மூன்று மொழிகள் அடிப்படையிலான கல்வியை வழங்குகின்றன.
- ஒட்டு மொத்தமான அளவில், இந்தியா முழுவதும் மும்மொழிப் பள்ளிகளில் சுமார் 74.7% மாணவர் சேர்க்கை பதிவாகியுள்ளது.
- இந்தப் பள்ளிகளில் அதிக மாணவர் சேர்க்கை கொண்ட பெரிய மாநிலங்கள் குஜராத் (97.6%), கர்நாடகா (89.5%), தெலுங்கானா (89.3%), மகாராஷ்டிரா (87%) மற்றும் உத்தரப் பிரதேசம் (81%) ஆகியனவாகும்.
- பெரிய மாநிலங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் மாணவர் சேர்க்கையினைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு (10.8%) ஆகும் என்ற நிலையில் அதைத் தொடர்ந்து பீகார் (58%), அசாம் (58.6%), ஜார்க்கண்ட் (59%) ஆகியவை உள்ளன.




# பொருளாதாரச் செய்திகள்

## 2026 ஆம் நிதியாண்டிற்கான 8 டிரில்லியன் கடன்




- 2026 ஆம் நிதியாண்டின் (2025-26) முதல் பாதியில் சந்தையில் இருந்து 8 டிரில்லியன் ரூபாய் கடன் வாங்கும் திட்டத்தினை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இது மொத்தச் சந்தைக் கடன் இலக்கான சுமார் 14.82 டிரில்லியன் ரூபாயில் சுமார் 54 சதவீதமாக இருக்கும்.

- இதில் அரசு இறையாண்மை பசுமைப் பத்திரங்கள் (SGBs) மூலம் 10,000 கோடி ரூபாய் வெளியிடுவதும் அடங்கும்.

## உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளர் 2024





- 2024 ஆம் ஆண்டில் இந்தியா 254 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்து உள்ளதுடன், உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக இந்தியா மாறியுள்ளது.
- உலக தேயிலை ஏற்றுமதியில் கென்யாவானது தனது முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இந்தியா இலங்கையை விஞ்சி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் கென்யா 500 மில்லியன் கிலோவுக்கு மேல் தேயிலையை ஏற்றுமதி செய்துள்ளது.
- இந்தியாவின் 2024 ஆம் ஆண்டு தேயிலை ஏற்றுமதி மதிப்பு 7,112 கோடி ரூபாயாகும்.

## BAANKNET இணைய தளம் மற்றும் e-BKray தளம்

- நிதி அமைச்சகம் ஆனது, வங்கிகளின் சொத்துக்களைப் பட்டியலிடுதல் மற்றும் ஏலம் விடுவதை மேலும் நெறிமுறைப் படுத்துவதற்காக 'BAANKNET' என்ற புதுப்பிக்கப்பட்ட இணைய வழி ஏல தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- 'e-BKray' என்ற தளம் ஆனது 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பட்டது.
- BAANKNET தளமானது, வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்காகவும் வாராக் கடன் (NPA) தொடர்பான வழக்குகளைத் தீர்க்கும் ஒரு செயல்முறையை மிகவும் நன்கு விரைவுபடுத்துவதற்காகவும் வேண்டி பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

❖ 'e-BKray' என்பது பொதுத்துறை வங்கிகளின் மீட்பு நடவடிக்கைகளின் கீழ் அதற்கானச் சொத்துக்களை அகற்றுவதற்கான எண்ணிம ஏல தளமாகும்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட MRI நுண்ணாய்வுக் கருவி





❖ நுண்ணாய்வு/உள்ளாய்விற்கான செலவினைக் குறைப்பதற்காக இந்தியாவானது உள்

நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் காந்த அதிர்வு வரைபடமாக்கல் (MRI) இயந்திரத்தை உருவாக்கியுள்ளது.

- ❖ உள்ளாய்விற்கானச் செலவினை 30 சதவீதத்திற்கும் அதிகமாகக் குறைக்க இந்த MRI இயந்திரம் உதவும்.
- ❖ இந்த இயந்திரம் ஆனது, புது டெல்லியில் உள்ள அகில இந்திய மருத்துவ மற்றும் அறிவியல் கல்வி நிறுவனம் மற்றும் பயன்பாட்டு நுண்ணலை மின்னணு பொறியியல் மற்றும் ஆராய்ச்சி சமூகம் (SAMEER) ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பின் விளைவாக உருவாக்கப்பட்டது.

## நட்சத்திர உருவாக்கம் - ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி

- ❖ ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கியானது HH 30 என்ற மிகவும் அற்புதமான ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளது.
- ❖ இது தன்னைச் சுற்றியுள்ள இடத்தில் ஆற்றலை நன்குத் தூண்டுவிக்கின்ற மற்றும் ஒரு புரோட்டோபிளானட்டரி (கிரக உருவாக்கம் சார்ந்த) வட்டை ஒளிரச் செய்யும் ஒரு இளம் /புதிய நட்சத்திரம் ஆகும்.
- ❖ வாயு மற்றும் தூசியின் சுழல் ஆனது ஒரு புதிய சூரிய மண்டலத்தை உருவாக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.
- ❖ இந்தப் புதிய உருவாக்கம் ஆனது, 450 ஒளி ஆண்டுகள் தொலைவில் டாரஸ் மூலக்கூறு மேகத்தில் அமைந்துள்ளது.
- ❖ HH 30 என்பது நட்சத்திரம் உருவாகும் பகுதியில் அமைந்திருக்கும் ஒரு சிறிய, ஒளிரும் நெபுலாவான ஒரு ஹெர்பிக்-ஹாரோ பொருளாகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## சன்னா நாச்சி


- ❖ தெற்கு காரோ மலைகளில் உள்ள தொலைதூர ஓடையில் ஒரு புதிய வகை பாம்புத் தலை மீன் கண்டறியப்பட்டுள்ளது.
- ❖ இந்த மீன் இனமானது, சன்னா நாச்சி என்று அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப் பட்டு உள்ளது.

- "நாச்சி" என்ற இந்தப் பெயரானது மீனுக்கான ஓர் உள்ளூர் சொல்லாகப் பயன்படுத்தப் படுகின்ற காரோ மொழியிலிருந்து பெறப்பட்டது.




# மாநிலச் செய்திகள்

## ஃபராக்கா தடுப்பணை - 50 ஆண்டுகள்




- ஃபரக்கா என்ற தடுப்பணை ஆனது, இந்திய மாநிலமான மேற்கு வங்காளத்தில் உள்ள முர்ஷிதாபாத் மாவட்டத்தில் அமைந்துள்ள கங்கை நதியின் குறுக்கே அமைந்துள்ள ஒரு தடுப்பணையாகும்.
- இந்தத் தடுப்பணையின் கட்டுமானம் ஆனது, 1962 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் தேதியன்று செயல்பாட்டுக்கு வந்தது.
- கொல்கத்தா துறைமுகத்திலிருந்து வண்டல் படிவுகளை வெளியேற்றுவதற்காக என்று கங்கை நதியிலிருந்து ஹூக்ளி என்ற நதிக்கு நீரைத் திருப்பி விடச் செய்வதே இந்தத்

தடுப்பணையின் நோக்கமாகும்.

- இந்தியாவும் வங்காளதேசமும் கங்கை நீர்ப் பகிர்வு தொடர்பாக 1977 ஆம் ஆண்டு ஃபராக்கா ஒப்பந்தம் மற்றும் 1996 ஆம் ஆண்டு கங்கை நீர் ஒப்பந்தம் போன்ற இரு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளன.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச கழிவகற்ற தினம் – மார்ச் 30

- இந்தத் தினமானது உலகளவில் கழிவு மேலாண்மையை நன்கு அதிகரிப்பதன் பெரும் முக்கியத்துவத்தையும், கழிவு மாசுபாடு நெருக்கடியை நிவர்த்தி செய்ய நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது.
- ஒவ்வோர் ஆண்டும், மனிதகுலம் சுமார் 2.1 பில்லியன் முதல் 2.3 பில்லியன் டன் வரை நகராட்சி திடக்கழிவுகளை உருவாக்குகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Towards Zero Waste in Fashion and Textiles" என்பதாகும்.





# இதரச் செய்திகள்

## Education and Nutrition: Learn to Eat Well அறிக்கை

- யுனெஸ்கோ அமைப்பானது, Education and Nutrition: Learn to Eat Well என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகளவில் பள்ளி உணவுகளில் சுமார் 27 சதவீதம் ஆனது, ஊட்டச்சத்து நிபுணர்களின் உள்ளீடுகளின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பதை இந்த ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- மதிப்பீடு செய்யப்பட்ட 187 நாடுகளில், 93 நாடுகளில் மட்டுமே பள்ளிகளில் வழங்கப் படும் உணவு குறித்து குறிப்பிட்ட வகையான ஒரு சட்டம் அல்லது வழிகாட்டுதல்களும்

இருந்தன.

- பள்ளிகளில் வழங்கப்படும் உணவானது, சேர்க்கை விகிதங்களை சுமார் 9 சதவீதமும், வருகையினை 8 சதவீதமும் அதிகரித்து, கற்றலை நன்கு மேம்படுத்தியதாக ஆய்வுகள் காட்டுகின்றன.




## Banyan நிறுவனத்தின் மனநல சேவை இல்லம் மாதிரி




- மனநல சேவைத் துறையில் பணியாற்றும் சென்னையில் உள்ள ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமான Banyan நிறுவனம் மேற்கொண்ட சில பணிகள் குறித்து உலக சுகாதார அமைப்பின் சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- 'மனநலக் கொள்கை மற்றும் உத்தி சார் செயல் திட்டங்கள்' குறித்த வழிகாட்டுதல்கள் ஆனது, மனநலத் தேவைகள் உள்ளவர்களை எவ்வாறு சமூகத்தில் இணைத்து அதில்

இருந்து பயனடையலாம் என்பதைப் பற்றி கூறுகிறது.

- உலக சுகாதார அமைப்பின் ஆவணத்தில் Banyan நிறுவனத்தின் பணிகள் குறிப்பிடப் படுவது இது இரண்டாவது முறையாகும்.
- ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னதாக, Banyan நிறுவனம் தனது 'Home Again' திட்டத்தின் கீழ் மனநலப் பிரச்சினையிலிருந்து மீண்ட நபர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தினை சோதனை அடிப்படையில் உருவாக்கியது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★